**MCOP NO:3189/2022 DATE:17.07.2023**

ம.சா.1

பெயர்.உதயகுமார்

த/பெ.திரு.குப்புராஜ்

வயது. 47

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 11 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன். மசாஆ 2 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யபடுகிறது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குற்ற இறுதி அறிக்கை, மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யபடவில்லை. என் மகனுக்கு அறுவை சிகிச்சை செய்யபடவில்லை. என் மகன் நன்றாக படிக்க கூடிய மாணவன், இதுவரை எந்த வகுப்பிலும் தோல்வி அடைந்தது இல்லை. தற்போது 9ம் வகுப்பு படிக்கிறார். மார்ச் 2022 பிறகு தொடர் சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு உரிய உரிமம் இல்லை என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க கடமைபட்டவர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.